**பிபில பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பிபில பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிபில பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை விளம்பர பதாதை கட்டணங்கள் ரூபா 165,450 ஆக இருந்த போதும் அது ரூபா 112,900 என ரூபா 52,550 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறுதலாக குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் போது கணக்குகள் தயாரிக்கும் போது சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபைக்குரிய 75 மயானங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | மயானங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 8,312,250 ஆக இருந்த போதும் அது ரூபா 8,188,250 என ரூபா | தவறுதலாக குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் போது கணக்குகள் தயாரிக்கும் போது சீராக்குவதாக | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 124,000 குறைத்து காணிக்கப்பட்டிருந்தது. | அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஈ) | பிரதேச சபைக்குரிய பொது கிணறுகளை நிர்மாணித்திருந்த 229 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | 229 காணித் துண்டுகள் சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டின் போது கணக்குகள் தயாரிக்கும் போது சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது ரூபா 192,815 செலவில் அலுவலகத்தின் முன்பக்க கூரையை நிர்மாணிக்கும் செலவினம் மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை. | அலுவலகத்தின் முன்பக்க கூரையை நிர்மாணிக்கும் செலவினம் தவறுதலாக மூலதனமாக்கப்படவில்லை எனவும் 2021 ஆம் ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2. கணக்காய்விற்கான எழுத்துமூலமான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 573,777,067 ஆன கணக்கு விடயமொன்றுக்குரிய தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | சபையினால் நியமிக்கப்பட்ட தற்காலிக மதிப்பீட்டு குழுவொன்றினால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் காணி மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,646,527 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 22,090,344 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கு இணக்க கூற்றின் பிரகாரம் ரூபா 210,299.69 தொகை வங்கியில் "குறைவான தொகை" என உள்ளடக்கப்பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதியான 2021 மார்ச் 10 ஆந் திகதி வரை அப்பற்றாக்குறை இனங் காணப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கு இணக்க கூற்றுக்களில் அவ்வேறுபாடு இனங்காண முடியாமல் இருந்ததாகவும் எதிர் காலத்தில் அவ்வேறுபாட்டை கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வங்கி கொடுக்கல் வாங்கல்களில் இடம் பெற்றுள்ள பற்றாக்குறைகள் அல்லது குறைபாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 2.3 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 4,862,804 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்காக நிகழ்ச்சித்திட்டமொன்றை ஒழுங்கு செய்திருந்த போதும் கொவிட் தொற்று காரணமாக செயற்படுத்த முடியவில்லையென குறிப்பிடப்பட்டிருந்தது. | நிலுவை வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த 08 அறிவித்தல் பதாதைகளுக்காக மீளாய்வாண்டின் போது அறவிட வேண்டிய ரூபா 118,050 ஆன விளம்பர கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவை வருமானங்களை செலுத்த வேண்டிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் கொடுப்பனவு செய்யாவிட்டால் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வருமான பரிசோதகர் உத்தியோகத்தர்களால் பரிசோதனை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு விளம்பர பதாதைகளை இனங்கண்டு அறவிடப்பட வேண்டும். |
| (இ) | பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 212,723 ஆன நிலுவை நீர் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையாக இருந்தவர்களின் நீர் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதுடன் அத்தொகையை அறவிடுவதற்கு சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | நிலுவை நீர்க் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 827,083 மற்றும் நிலுவை முத்திரை கட்டணங்கள் ரூபா 6,652,610 அறவிடப் பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை பெற்றுக் கொள்வதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ள அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பிபில பிரதேச சபை பிரதேசத்தில் 23 அத்துமீறிய நிர்மாணங்கள் இனங்காணப்பட்டிருந்த போதும் கணக்காய்வு திகதியான 2021 மார்ச் 10 ஆந் திகதி வரை அது தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதியற்ற நிர்மாணங்கள் இனங்காணப்பட்டு அவற்றை நிறுத்துமாறு அறிவித்தல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் வருமான பரிசோதகர் மூலம் அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டு சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு 2021 ஏப்ரல் மாத மாதந்த கூட்டத்தொடருக்கு அனுப்பி வைக்கப்படடுள்ளதாகவும் உரிய அறிக்கை மற்றும் அங்கீகாரம் கிடைத்த பின் வழக்கு தொடருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |